[20th July 1964

கனம் சபாநாயகர் : அங்கும் ரிட் போட்டால் என்ன செய்வது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : நான் சொல்வதற்கு முன்னதாகவே கனம் சபாநாயகர் முந்திக்கொண்டு விட்டார்கள். அங்கே அப்படித்தான் ஆயிற்று. முதலில் ஒரு இடம் பார்த்தோம். அது கிடைக்காமல் போயிற்று. பிறகு வேறு ஒரு இடம் பார்த்தோம். அதுவும் கிடைக்காமல் போயிற்று. இப்போது பார்த்திருப்பது மூன்றாவது இடம். இதுவும் கிடைக்காவிட்டால் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் அந்த ஊருக்கு வராமல் போகலாம். அவ்வளவுதான் என்னால் சொல்ல முடியும்.

* 566 கேள்வி.—திரு. சி. சிவசுப்ரமணியன் : கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தென்னாற்காடு ஜில்லா, சிதம்பரத்தில் ஒரு தொழிற்பேட்டை ஆரம்பிக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : No.

மின்சார உற்பத்தி

* 567 கேள்வி.—திரு. மா. இராசாங்கம்: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

மதுரை மாவட்டத்திலுள்ள சுருளி ஆற்றிலிருந்து மின்சாரம் எடுப்பதான திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சுருளி ஆற்று நீரைப் பயன் படுத்தி 25 மெகவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அணைக்கட்டு கட்டுவதற்கு உரிய இடங்கள் முதலியவை குறித்துப் பரிசீலனைகள் நடந்து வருகின்றன.

அரிசன நலக் கமிட்டிகள்

* 568 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல்: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) 1963-ம் ஆண்டு ஆகஸ்ட்டு மாதம் 17-ம் தேதி நட்சத்திரக் குறியிடாத 32-ம் எண் கேள்விக்கு அளித்த பதிலைபொட்டி மாவட்ட அரிசன நலக் கமிட்டிகளில் முன்னாள் எம்.எல்.ஏ.-க்கள் அங்கம் வகிக்கிறார்களே ஒழிய தற்போதைய எம்.எல்.ஏ.-க்கள் சேர்க்கப்படவில்லை என்பதற்குக் காரணமென்ன ?

(இ) அவர்களையும் இக்கமிட்டியில் நியமிக்க உத்தேச முண்டா ?

(உ) சென்னை மாநகரில் இப்படியொரு கமிட்டி அமைக்கப் படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) மாவட்ட ஹரிஜன நலக் குழுக் களில் சாதாரணமாக 10 அரசாங்க அதிகாரிகளும் அதிகாரச் சார் பற்ற பத்து பேரும் உறுப்பினர்களாக இருப்பர். சில இடங்களில்

20th July 1964]

தற்போதைய சட்டசபை உறுப்பினர்களும் அத்தகைய குழுக்களில், அதிகாரச் சார்பற்ற உறுப்பினர்களாகச் சேர்க்கப்படுகின்றனர். இதைத் தவிர மாவட்டக் குழுவின் கூட்டம் நடைபெறுகின்ற இடத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும், சட்டசபை உறுப்பினர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் (இவர்கள் ஏற்கனவே குழுவில் உறுப்பினர்களாக இல்லாமலிருந்தால்) சேர்த்துக் கொள்ளப்பட்ட உறுப்பினர்களாகக் குறிப்பிட்ட கூட்டத்திற்கு வரலாம்.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

(உ) இத்தகைய குழு ஒன்றை சென்னை மாநகரில் அமைக்க வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில் மாநில ஹரிஜன நலக் குழு சென்னையில் தலைமை அலுவலகத்துடன் செயல்பட்டு வருகிறது.

(a) The District Harijan Welfare Committees generally have on their strength about 10 Government officials and 10 Non-officials. In some cases, sitting Members of the Legislative Assembly are included as non-officials in such Committees. In addition, Members of Parliament and Members of the Legislative Assembly and Legislative Council of the taluk where the meeting of the District Harijan Welfare Committee is held (who are not already members of the Committee), are invited to attend the particular meeting as co-opted members.

(b) Does not arise.

(c) The need for such a Committee has not been felt as there is a State Harijan Welfare Committee with headquarters at Madras.

திரு. இராம. அரங்கண்ணல் : சார், பழங்குடிப் பெருமக்களின் பிரச்னை கட்சிக்கு அப்பாற்பட்ட பிரச்னையாக எல்லோராலும் கருதப்பட்டுக்கொண்டு வருகிறது. சென்னை மாநகரத்தைப் பொறுத்த வரையில் நடைபெறுகிற ஹரிஜன நல விழாக்களில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த யாரையும் சேர்த்துக் கொள்ளாமலேயே நடைபெற்றுக்கொண்டு வருகிறதே, அது நல்லதா?

கனம் திரு. பூ. கக்கன் : கனம் அங்கத்தினர் கேட்டுள்ள கேள்வி சட்ட சபை அங்கத்தினர்களைச் சேர்த்துக் கொள்ளுவதைப் பற்றியது. அது கட்சிகள் விழாக்களில் கலந்து கொள்வதைப் பற்றி அல்ல. விழாக்களில் கலந்துகொள்வதைப் பற்றித் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

திரு. கே. ஏ. மதியழகன்: தலைவர் அவர்களே, சென்னை நகரத்திற்கு மாவட்ட கமிட்டி தேவையில்லை, ஏனென்றால் ஸ்டேட் வெல்பேர் போர்டு இருக்கிறது என்று சொன்னார்கள். ஸ்டேட் வெல்பேர் போர்டு மாநிலம் முழுவதற்கும் இருக்கிறது. தலைநகரிலும்

இந்தப் பிரச்னை இருக்கிறது. தீண்டத்தகாததாக சென்னை நகரத்தை ஒதுக்குவது நியாயம் அல்ல என்று கருதி இதை மீண்டும் பரிசீலனை செய்வார்களா?

கனம் திரு. பூ. கக்கன்: சென்னை நகரத்தில் தீண்டாமை கையாளப்படுவதில்லை. நகரத்தைப் பொறுத்த வரையில் தீண்டாமை ஒழிந்து விட்டது, ஆகையால் தேவையில்லை. ஆனால் இங்கே சில கருவிகள் கொடுக்கிறோம். அதைக் கொடுப்பதிலே அதற்காக ஒரு கமிட்டி வைத்துக் கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறது.

திரு. இராம. அரங்கண்ணல்: மாநில ஹரிஜன நல போர்டில் எதிர்க் கட்சி உறுப்பினர்களுக்கு இடம் இருக்கிறதா? அப்படி இருந்தால் அந்த எம்.எல்.ஏ.க்களின் பெயரை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

கனம் திரு. பூ. கக்கன்: இடம் இருக்கிறது. பெயர் இப்போது என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பார்த்துச் சொல்லலாம். . . .

திரு. இராம. அரங்கண்ணல்: இல்லை . . . எதிர் கட்சித் தலைவரே அதில் இல்லை . . .

கனம் திரு. பூ. கக்கன்: மெம்பர் இருக்கிறார். தனிக்கேள்வி போட்டால் பெயரைப் பார்த்துச் சொல்லலாம்.

திரு. கே. ஏ. மதியழகன்: தலைவர் அவர்களே, இந்த ஹரிஜன நல போர்டில் ஹரிஜனங்கள் அல்லாத உறுப்பினர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டிய அவசியம் இருப்பதால் அதிகமான உறுப்பினர்களை இனிமேலாவது சேர்த்துக்கொள்ள சர்க்கார் முன் வருவார்களா?

கனம் திரு. பூ. கக்கன்: மாநில ஹரிஜன நலக் குழுவில் ஹரிஜனங்கள் அல்லாத அங்கத்தினர்களை அதிகமாகச் சேர்க்க முடியாது. ஏனென்றால் ஹரிஜனங்களுக்கே அதிகமான இடம் கொடுக்க வேண்டியிருக்கிறது. பல ஆண்டுகளாக ஹரிஜன சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் இந்தக் கமிட்டியில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

கனம் சபாநாயகர் அவர்களே, முன்பு திரு. அரங்கண்ணல் கேட்ட கேள்வியைப் பொறுத்த வரையில், இப்போது எனக்கு ஞாபகம் வருகிறது. அவர்கள் கட்சியைச் சேர்ந்த கனம் அங்கத்தினர் திரு. மாணிக்கம் இதில் அங்கத்தினராக இருக்கிறார்.

தண்ணீர்க் குழாய் (அரக்கோணம்)

* 569 கேள்வி—திரு. எஸ். ஜே. ராமசாமி: கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அரக்கோணம் தாலுகா, தக்கோலம் கிராமத்தில் சோதனை தண்ணீர்க் குழாய் போட்டதில் போதுமான தண்ணீர் அரக்கோணம் தொழிற்பேட்டைக்குக் கிடைக்கிறதா?